இலங்கையின் முன்னோடி சோசலிசவாதி அவரது நூறாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.



கரொலைன் அன்தோனி பிள்ளை – 1940 ஆம் ஆண்டுகளில்

# கரொலைன் அன்தோனி பிள்ளை

## பொரளுகொடை பெண் சிங்கம்

இலங்கையின் ஆரம்பகால சோசலிச இயக்கத்தின் இறுதி இடையிணைப்பாளராக வாழ்ந்துவருகின்ற கரொலைன் அன்தோனி பிள்ளை ஒக்ரோபர் 08 ஆந் திகதி நூறு வயதை பூர்த்தி செய்கின்றார். கரொலைனுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் இதனைக் கொண்டாடுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவர் பல விதத்திலும் ஒரு முன்னோடியாக விளங்கினார். அவரது உணர்ச்சிமிக்க மூத்த சகோதரர்களான பிலிப் குணவர்தன மற்றும் ரொபர்ட் குணவர்தன ஆகியோரால் அரசியலினுள் ஈர்த்தெடுக்கப்பட்ட இவர் முப்பதாம் ஆண்டுகளின் ஆரம்ப காலத்தில் வளர்ச்சியடைந்து வந்த இலங்கை தேசிய இயக்கத்தில் பங்குபற்றினார் என்பதோடு 1935 இல் இலங்கை சமசமாஜக் கட்சியை ஆரம்பிப்பதற்கு உதவியாயிருந்தார்.

இரண்டாவது உலக மகா யுத்த காலத்தில் கரொலைன் அவரது கணவரான எஸ்.சீ.சீ. அன்தோனி பிள்ளையுடன் இந்தியாவில் மறைமுகமாகச் செயற்பட்டுவந்த ட்ரொஸ்கிவாதக் கட்சிக்காக சேவையாற்றினார். 1947 இல் இவர் இந்திய தொழிலாளர் போராட்டத்தின் திருப்புமுனையாக இருந்த சென்னையின் 100 நாள் புடவைத் தொழில் வேலை நிறுத்தத்திற்குத் தலைமை தாங்கினார். சுதந்திரத்தின் பின்னர் சோசலிச இயக்கத்தின் இடதுசாரிப் பிரிவைக் கட்டியெழுப்பவதற்கு உதவும் முகமாக இவரும் இவரது கணவரும் இந்தியாவில் தங்கியிருந்தார்கள். இவரது ஒத்துழைப்புடன் அவர் தேசிய மட்டத்திலான தொழிற்சங்க மற்றும் பாராளுமன்றத் தலைவர் ஒருவராக மாறினார். 2000 ஆம் ஆண்டில் இவர் மரணமடைகின்ற போது கரொலைன் இறுதியாக அவரது தாய் நாட்டிற்குத் திரும்பி வந்தார். வேறொரு காலகட்டத்தில் அவர் பிறந்த பொரளுகொடை பாரம்பரிய வீட்டுக்கு அண்மையில் அமைந்துள்ள இன்னொரு வீட்டில் தமது குடும்பத்தினர்களுடன் வாழ்ந்து வருகின்றார்.

### வளர்ச்சிப் பருவம்

டோனா கரொலைன் ரூபசிங்க குணவர்தன 1908 ஒக்ரோபர் 08 ஆந் திகதி அவிசாவலை மாவட்டத்தில் பொரளுகொடை கிராமியப் பிரதேசமொன்றில் பிறந்தார். இவரது தந்தையான டொன் ஜாகொலின் ரூபசிங்க குணவர்தன கிராமத் தலைவராகவும் விதான ஆரச்சியாகவும் (கிராமப் பொலீஸ் உத்தியோகத்தர்) பிரித்தானிய காலனித்துவ அரசாங்கத்திற்குச் சேவையாற்றிய செல்வச் செழிப்புமிக்க காணிச் சொந்தக்காரராக விளங்கினார். அப்பிரதேச மக்கள் இவரை கௌரவத்துடன் பொரளுகொட ராலஹாமி என்றே அழைத்தனர். இவர் தமது பிள்ளைகள் அனைவருக்கும் ஹெரீ, பிலிப், பென்ஜமின் (ரொபட்), சேரா, எக்னஸ், சொபியா, எமிலி அன்ஜலீன், எலிஸ் மற்றும் கரொலைன் என ஆங்கிலேயப் பெயர்களை இட்டார். ஆயினும், தமது சிங்கள பௌத்த கலாசாரம் தொடர்பாகப் பெருமை பாராட்டுவதற்கு அவர் இவர்களுக்குக் கற்பித்தார். பொரளுகொடை விஹாரையில் மற்றும் பொரளுகொடைக்கு அண்மையில் அமைந்துள்ள களு அக்கல சித்தார்த்த வித்தியாலயத்தில் இவர் தமது பிள்ளைகளுக்குக் கல்வி புகட்டினார்.

1915 இல் சிங்கள பௌத்தர்களுக்கும் முஸ்லிம் வர்த்தகர்களுக்கும் இடையே வர்த்தகம் காரணமாக உருவாகியிருந்த பகைமை இன ரீதியிலான வன்முறை வரை வளர்ச்சியடைந்தது. பிரித்தானிய ஆளுநர் மார்ஷல் சட்டத்தை பிறப்பித்தார் என்பதோடு, கரொலைனின் தந்தை உட்பட சந்தேகிக்கப்பட்ட தேசியவாத இயக்கத்தினர் கைது செய்யப்பட்டனர். வன்முறையில் ஈடுபட்டவர்களுக்கு டைனமைற் வழங்கியமை கரொலைனின் தந்தைக்கு எதிரான குற்றச்சாட்டாயிருந்ததோடு, இவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு ஏழு மாதங்கள் சிறையிலடைக்கப்பட்டிருந்ததன் பின்னர் சாட்சியங்கள் இன்மையால் இவர் விடுதலை செய்யப்படார். இவ்வேதனைமிக்க அனுபவம் குணவர்தன குடும்பத்தின் அங்கத்தவர்களை உறுதியான தேசியவாதிகளாக மாற்றியது. தமது பிள்ளைகளை பிரின்ஸ் ஒப் வேல்ஸ் கல்லூரியிலிருந்து விலக்கிய பொரளுகொட ராலா□மி அவர்களை ஆண் பிள்ளைகளுக்கான பரமவிஞ்ஞார்த்த பௌத்த பாடசாலையான ஆனந்த கல்லூரியில் சேர்த்தார். கரொலைன் மற்றும் அவரது சகோதரிகளை ஆனந்த கல்லூரியின் சகோதர பாடசாலையான மியூசியஸ் கல்லூரிக்கு அனுப்பினார். மியூசியஸ் கல்லூரியில் கல்வியை முடித்ததன் பின்னர் கரொலைன் மீண்டும் கிராமத்திற்கு வந்து சித்தார்த்த வித்தியாலயத்தில் கற்பிக்க ஆரம்பித்தார்.

கரொலைன் ஒருபோதும் அதிகாரத்தின் முன்னே தலைசாய்த்த ஒருவரல்ல. அவரது மருமகள் விவியன் குணவர்தன (குணதிலக்க) கரோ மாமியார் தமக்கு அச்சமின்மை மற்றும் விடாப்பிடியாயிருப்பதற்கு எவ்வாறு கற்பித்தார் என்பதனை பின்வருமாறு நினைவூட்டுகின்றார். ‘இந்த இளம் பெண் துணைக்காவல் மாது நீராடுவதற்காகக் கொண்டுவரப்பட்டிருந்த யானைகளின் வயிற்றுக்குக் கீழால் கடந்து செல்வதற்கு சிறு பிள்ளைகளைத் தூண்டினார். பல தடவைகள் சிறுபிள்ளைகளைக் கொண்டு அதனைச் செய்வித்தார். இந்த முரட்டுத்தனமான செய்கையைப் பற்றி அறிந்த எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சிறு பிள்ளைகளைத் துணிவுமிக்கவர்களாக ஆக்குவதற்கு முயற்சித்தமைக்காக கரொலைனுக்கு அவரது தாயிடமிருந்து பிரம்படி கிடைத்தது. பிரம்படி எவ்வாறிருப்பினும் மீண்டும் பாடம் புகட்டுதல் நடைபெற்றது.’ (புல்சரா லியனகே, விவீ, விவியன் குணவர்தன வாழ்க்கை வரலாறு, 1998)

### புரட்சிகரக் கட்சிக்கான பீடிகை

இருபதுகளின் பிற்பகுதியில் கரொலைனும் அவரது சகோதரர்களும் முழுமையான சுதந்திரத்தை இலக்காகக் கொண்ட சனநாயக சீர்திருத்தங்களை வேண்டிநின்ற தேசியவாத இளைஞர் குழுக்களின் தீவிர அங்கத்தவர்களாக இருந்தனர். 1931 இல் அரச சபையொன்று அமைக்கப்படும் என பிரித்தானியா அறிவித்ததும், ஹெரீ குணவர்தன அவிசாவலை தேர்தல் தொகுதிக்குப் போட்டியிடுவதற்கு தீர்மானித்தார். கரொலைன் தமது சகோதரருக்காக பிரசார வேலைகளில் ஈடுபட்டார். பணக்காரராகவும் பலம்பொருந்தியவருமாக இருந்த தமக்கு எதிராகப் போட்டியிடுகின்றவர் இத் திடீர் உயர் உறவினரது சவாலால் கோபமடைந்திருந்த விதத்தினை ரொபட் தனது நினைவுக் குறிப்புகளில் விளக்குகின்றார். (டேலி மிரர், 1971 நவெம்பர் 9ஆம் திகதி). ஹெரீ தோல்வியடைந்த போதிலும் கரொலைன் தமக்குரிய வழியைக் கண்டுகொண்டார். அன்றிலிருந்து இலங்கையும் இந்தியாவும் சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கும், அனைவருக்கும் சமூக நீதியை வென்றெடுப்பதற்காகவும் அவர் தமது வாழ்க்கையை அர்ப்பணித்தார்.

1932 இன் இறுதிப் பகுதியில் ஐக்கிய அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் 10 வருட காலம் தற்காலிகமாகத் தங்கியிருந்ததன் பின்னர் அவரது சகோதரர் பிலிப் இலங்கைக்கு வந்தார். அங்கு அவர் ஸ்டாலினுக்கு எதிராக ட்ரொஸ்கிக்கு ஒத்துழைப்பு வழங்கியமையின் காரணமாக அவரை விலக்கும் வரை அவர் பிரித்தானியாவின் கம்யூனிஸ்ட் கட்சியின் தீவிர அங்கத்தவராக இருந்தார். வீட்டிற்குத் திரும்பி வந்ததன் பின்னர் அவர் கரொலைனையும் ரொபட்டையும் தனது புரட்சிகரத் தத்துவத்தின் பக்கம் ஈர்த்துக்கொண்டார். இலங்கையின் புரட்சிகர அமைப்புக்களின் மையமாக இது அமைந்திருந்தது.

நினைவு தினத்தை உத்தியோக ரீதியான மட்டத்தில் நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் விதத்திலான வருடாந்த சூரிய காந்தி மலர் இயக்கத்தில் கரொலைன் பங்கேற்றார். முதலாவது உலக மகா யுத்தத்தின் போது பிரித்தானியாவுக்கு தமது சாம்ராஜ்ஜியத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்கு உதவும் வகையில் இலங்கையின் போர் வீரர்கள் போராடியுள்ளனர். ஆயினும் பிரித்தானியப் படைவீரர்கள் பெற்ற நலன்களை அவர்களால் அனுபவிக்கக் கிடைக்கவில்லை. கரொலைனும் அவரது கட்சியின் சகோதரர்களும் ஏகாதிபத்தியவாத எதிர்ப்புக் கோஷங்களைக் கொண்டே சூரிய காந்தி மலர் இயக்கத்தின் செயற்பாட்டாளர்களுக்கு ஆர்வமூட்டினார்கள்.

1933-34 இல் மலேரியா கொள்ளைநோய் பரவிய போது, உணவு மற்றும் மருந்துகளை வழங்கும் பொருட்டு சூரிய காந்தி மலர் இயக்கத்தினர், அதனால் பாதிக்கப்பட்ட கிராமங்களுக்குப் பிரிந்து சென்றனர். கரொலைன் இங்கு முக்கியமானதொரு பணியை ஆற்றினார். குணவர்தன குடும்பத்தினர் பொரளுகொடையிலுள்ள தமது வீட்டில் மருந்தகமொன்றை நிறுவினார்கள். குணவர்தன குடும்பத்தினரைச் சுற்றிலுமிருந்த குழுவினருடன் சேர்ந்கொண்ட மியூசியஸ் கல்லூரியில் தம்முடன் ஒரே வகுப்பில் கற்ற செலீனா பெரேராவுடன் (பீரிஸ்) கரொலைன் மிக நெருக்கமாகச் செயலாற்றினார்.

## லங்கா சமசமாஜக் கட்சி

1935 இல் இரண்டாவது அரச சபைக்கான தேர்தல் 1936 இன் ஆரம்பப் பகுதியில் நடைபெறுமென பிரித்தானிய அரசாங்கம் அறிவித்தது. சோசலிசக் கட்சியொன்றை ஆரம்பித்து அரச சபைக்கு அபேட்சகர்களை முன்னிறுத்துவதற்கான உரிய தருணம் வந்துள்ளதாக சூரிய காந்தி மலர் இயக்கத்தின் செயற்பாட்டாளர்கள் தீர்மானித்தனர். புதிய கட்சியின் பின்னணியிலிருந்த இயக்க சக்தியாக பிலிப் குணவர்தன அவர்களே விளங்கினார். அனைத்து விதமான இன, சாதி, வகுப்பு மற்றும் பால் நிலையுடன் தொடர்புடைய அநீதிகள் அற்ற சமத்துவத்துடன் கூடிய சமூகமொன்றை (சம சமாஜ) துணிவுமிக்க குறிக்கோளாகக் கொண்ட சிவப்புக் கட்சியொன்றுடன் சேர்ந்து சம்பிரதாயங்களுக்குப் புறங்காட்டுமளவு துணிவு கரொலைனிடம் இருந்தது. பிற்பட்ட காலத்தில் கட்சித் தலைவர் என்.எம். பெரேராவைத் திருமணம் முடித்த இவரது நண்பியான செலீனா பீரிஸும், கடும் பெண்ணியல்வாதியான சுசான் டி சில்வாவுமே ஏனைய குறிப்பிடத்தக்க தலைவியர்களாக விளங்கினர்.

புதிய கட்சி அரச சபைக்குப் போட்டியிடுவதற்காக நான்கு அபேட்சகர்களை உடனடியாகப் பெயரிட்டது. பிலிப் அவிசாவலைத் தொகுதிக்குப் போடடியிட்டார். பிலிப் சார்பில் தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்ட கரொலைன் ஒவ்வொரு கிராமம்தோறும் சென்றார். எந்தவொரு மேடையிலும் சிறந்த பேச்சாளராக விளங்கிய அவர் மிக விரைவிலேயே ‘பொரளுகொடை சிங்கம்’ எனப் பிரசித்தி பெற்றார். அவர் பெரும் தொகையான மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றார். என்.எம். பெரேராவும் ருவன்வெல்லை தேர்தல் தொகுதியில் வெற்றி பெற்றார். இப்பிரசித்திபெற்ற லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர்கள் இருவரும் மாக்சிசத்தின் செய்தியை மக்களிடையே பரப்புவதற்கும், அவர்கள் சார்பில் சீர்திருத்தங்களுக்காகப் போராடுவதற்கும், அரச சபையைப் பயன்படுத்தினார்கள்.

கரொலைன் தமக்கே உரிய தனித்துவத்துடன் கூடிய கௌரவத்துக்குரிய கட்சித் தலைவராக மாறினார். 1937 இல் இந்திய தேசிய காங்கிரஸின் பாயிஸ்பூர் கூட்ட அமர்விற்கு லங்கா சமசமாஜக் கட்சியினால் அனுப்பப்பட்ட தூதுக் குழுவுக்கு கட்சி கரொலைனையும் தெரிவு செய்தது. கரொலைன் கட்சியின் பெண்களுக்கு, குறிப்பாக பின்னர் முறையே லெஸ்லி குணவர்தன மற்றும் பிலிப் குணவர்தனவைத் திருமணம் முடித்த விவியன் குணதிலக்க மற்றும் குசுமசிறி அமரசிங்கவுக்கு முன்னுதாரணமானதொரு சரிதையாக விளங்கினார்.

## காதல், திருமணம் மற்றும் வேலை நிறுத்தங்கள்

1937-38 காலப் பகுதியில் ‘டோனி’ என்ற செல்லப் பெயரால் அழைக்கப்பட்ட எஸ்.சீ.சீ. அன்தோனி பிள்ளை உட்பட திறமையான தமிழ் இளைஞர்கள் பலர் லங்கா சமசமாஜக் கட்சியில் இணைந்துகொண்டனர். டோனிக்கு தொழிற் சங்கத் தலைவராவதற்கான ஆற்றல் உள்ளதென்பதைக் கட்சித் தலைவர்கள் உணர்ந்தார்கள். எவ்வாறாயினும் இவரால் சிங்களத்தில் உரையாட முடியாதிருந்ததோடு, அது பெரும் தடையாக விளங்கியது. ஆதலால் சித்தார்த்த வித்தியாலயத்தில் தமது சகோதரி கரொலைனிடம் சிங்களம் கற்குமாறு பிலிப் குணவர்தன டோனிக்கு யோசனை தெரிவித்தார்.

பெரும்பாலான விடயங்களில் கரொலைனும் டோனியும் இரு வேறு உலகங்களில் இருந்தனர். அவர் அமைதியான உபாயசீலராக இருந்தார் என்பதோடு, அவள் உணர்ச்சிவசப்படுபவராக இருந்தார். அவர் ஒரு தமிழர் என்பதோடு அவள் சிங்களவராவார். அவரது பெற்றோர் கிறிஸ்தவர்களாயிருந்தனர் என்பதோடு அவளது பெற்றோர் பௌத்தர்களாவர். அவர் 24 வயதினராயிருந்தார். அவளது வயது 30 ஆகும். ஆயினும் இருவரும் மிக நெருக்கமாக காதல்வயப்பட்டனர். 1939 இல் எளிமையானதொரு விழா எடுத்து கரொலைனும் டோனியும் திருமணம் முடித்தார்கள்.

தமிழ் பெருந்தோட்டத் தொழிலாளர்களை லங்கா சமசமாஜக் கட்சியின் தொழில் சங்கத்தில் இணைத்துக்கொள்ளும் பொருட்டு லங்கா சமசமாஜக் கட்சி புதிதாகத் திருமணம் முடித்த சோடியை, சுற்றிவரத் தேயிலைப் பயிர்ச் செய்கையுள்ளதும் கண்டியிலிருந்து 25 மைல்கள் தெற்கே அமைந்துள்ளதுமான மலைநாட்டு நகரமொன்றான நாவலப்பிட்டியவுக்கு அனுப்பிவைத்தது. அது கஷ்டமானதும் இடர்கள் நிறைந்ததுமானதொரு அலுவலாக இருந்தது, கலவரங்களை ஏற்படுத்தக் கூடியவர்கள் வருவதற்கு இடமளிக்காதிருக்க பிரித்தானிய பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையாளர்கள் தமது கண்காணிகளையும் கடைத்தெருவில் இருந்த குண்டர்களையும் பயன்படுத்தினார்கள். நாவலப்பிட்டியில் வாழ்ந்துவந்த காலத்தில் கரொலைன் தமது முதலாவது புதல்வரான மகேந்திரனையும் அடுத்து ரஞ்ஜித் சேன்னையும் பெற்றெடுத்தார். உரைகள் நிகழ்த்துகின்ற மற்றும் கூட்டங்களை ஒழுங்கு செய்கின்ற அதேநேரம் அவளது குடும்பத் தேவைகளுக்காகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதற்கு அவளுக்கு நேரிட்டது.

அப்போது ஐரோப்பாவில் இரண்டாவது உலக மகா யுத்தம் ஆரம்பிக்கப்பட்ட தருணமாயிருந்தது. ட்ரொஸ்கி பிரிவினரைப் பின்பற்றி லங்கா சமசமாஜக் கட்சி கடுமையாக ‘ஏகாதிபத்திய யுத்தத்தை’ எதிர்த்தது. தொடர்ந்தும் ட்ரொஸ்கிவாதிகளான கலவரங்களை உருவாக்குகின்றவர்களையிட்டுப் பொறுமையாயிருக்க விரும்பாத காலனித்துவ அரசாங்கம் அரச சபை பிரதிநிதிகள் இருவரும் உட்பட லங்கா சமசமாஜக் கட்சியின் நான்கு தலைவர்களை கைது செய்ததோடு, கட்சியின் அச்சகத்தைத் தடை செய்து கட்சியின் செயற்பாடுகளையும் தடை செய்தது. அடக்குமுறையின் பிடி கடுமையாகின்றபோது கூட, டோனியும் கரொலைனும் தமது அலுவல்களை முன்னெடுத்துச் சென்றனர். 1940-41 இல் அவர்கள் பஸ் வண்டித் தொழிலாளர்கள், துறைமுகத் தொழிலாளர்கள் மற்றும் தானியக் களஞ்சியத் தொழிலாளர்கள் பங்கேற்ற வேலை நிறுத்தங்களுக்குத் தலைமை தாங்கினார்கள். அவரது மருமகனான அஜித் குணவர்தன, கரொலைன் மிகக் கடுமையாக

இருந்தார் என அண்மையில் என்னிடம் கூறினார். அதாவது பிலிப் அல்லது ரொபட்டை விடக் கடுமையாக இருந்தார் என்று.

## இந்தியாவுக்குப் புறப்படுதல்

1942 ஏப்பிரல் மாதம், லங்கா சமசமாஜக் கட்சியின் இரகசிய செயற்பாட்டாளர்கள் தமது தலைவர்களை சிறையிலிருந்து விடுவிக்கும் பொருட்டு மிகவும் நுணுக்கமாகத் திட்டமிட்டிருந்த விடுவிப்பு நடவடிக்கையொன்றை மேற்கொண்டனர். சிறையை உடைத்து வெளியேறியமை அடக்குமுறையை மேலும் கடுமையாக்கியது. அதற்கிடையே இந்தியாவின் காந்தியடிகள் பிரித்தானியர்களுக்கு இந்தியாவை விட்டுச் செல்லுமாறு நிர்ப்பந்தித்து பொதுமக்கள் பேரணியொன்றைத் திரட்டுவதாக அச்சுறுத்தினார். ட்ரொஸ்கிவாத அமைப்பொன்றின் கட்டமைப்பாயிருந்த இந்திய பொல்ஷெவிக் லெனின்வாத கட்சியை (BLPI) ஒழுங்கமைப்பதற்கு லங்கா சமசமாஜக் கட்சி ஏற்கனவே உதவியிருந்தது. இலங்கையில் அதிகளவில் எதனையும் செய்ய முடியாததொரு நிலைமை உருவாகியிருந்தமையால் இந்தியாவுக்குத் தப்பிச் சென்று அவர்களது BLPI சகோதரர்களுக்கு எதிர்காலத்தில் உருவாகவிருந்த பெரும் போராட்டங்களுக்கு உதவுவதற்கு லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர்கள் தீர்மானித்தனர்.



கரொலைனும் எஸ்.சீ.சீ. அன்தோனி பிள்ளையும் ஒலிவாங்கியில் உரை நிகழ்த்துகின்றனர். காங்கிரஸ் (ஓ) தலைவர் கே. காமராஜ் கரொலைனுக்கும் டோனிக்கும் மத்தியில் நின்றுகொண்டிருப்பவர் BLPI யின் முன்னாள் அங்கத்தவரும் சென்னை தொழிலாளர் சங்கத்தின் செயலாளருமான சீ.கே. நாராயணன்- 1974

1942 ஜூலை மாதத்தில் இலங்கையின் ட்ரொஸ்கிவாதிகள் பலர் படகுகளின் மூலம் இரகசியமாக இந்தியாவுக்குத் தப்பிச் சென்றனர். இருபது பேர் மும்பாய்க்குச் சென்றார்கள் என்பதோடு டோனி சென்னைக்குச் சென்றார். கவலையடைந்திருந்த கரொலைன் இரண்டு பிள்ளைகளுடன் இங்கு தங்கியிருந்தார். ஒரு மாதத்திற்குப் பின்னர் ‘இந்தியாவிலிருந்து வெளியேறு’ என்ற புரட்சி ஆரம்பமாகியது. இத்துறைக்குப் புதியதாக இருந்த BLPI அதனிடமிருந்த வரையறுக்கப்பட்ட வளங்களைப் போராட்டத்திற்குப் பயன்படுத்தியது. சென்னையில் டோனியும் அந்நாட்டு BLPI அங்கத்தவர்கள் சிலரும் ஒன்றுசேர்ந்து புரட்சிக்கு ஒத்துழைப்பு வழங்கி பத்திரங்களை அச்சிட்டனர்.

“இந்தியாவிலிருந்து வெளியேறு” என்ற புரட்சி அடங்கியதும் சென்னைக்கு வந்து தம்முடன் சேர்ந்துகொள்ளுமாறு டோனி கரொலைனுக்குச் செய்தியனுப்பினார். இறுதியில் குடும்பம் மீண்டும் சேர்ந்தது. ஆயினும் நிலைமை மிகவும் கஷ்டமாக இருந்தது. பொலீசார் எல்லா இடங்களிலும் ட்ரொஸ்கிவாதிகளைத் தேடுவதில் ஈடுபட்டிருந்தனர். அவள் பெரும் ஆபத்துக்கு முகம்கொடுத்தே வெளியே சென்றுவந்தார். சரளமாகத் தமிழ் பேசத் தெரியாத அவளால் அந்நாட்டு மக்களுடன் கலப்பதற்கு முடியாதிருந்தது. அவள் வாழ்ந்துவந்த விதமும் ஆபத்தானதாக இருந்தது. அவளும் டோனியும் தமது மாடி வீட்டை கட்சியின் இளம் சகோதரர்களுடன் பகிர்ந்துகொண்டனர். எப்போதும்போல் நடைபெறுகின்ற போக்குவரத்துகள், நாளின் அனைத்து நேரங்களிலும் நடைபெறும் கூட்டங்கள் மக்கள் விழிப்புடன் கதைப்பதற்குக் காரணமாயிருந்திருக்கலாம்.

## இலங்கைக்குத் திரும்பி வருதல்

1943 ஜூலை மாதத்தில் பிலிப் மற்றும் குசுமா குணவர்தனவும் மேலும் பல இளம் சகோதரர்களும் தங்கியிருந்த மும்பாயின் BLPI இரகசிய வீடு பொலீசாரால் சுற்றிவளைக்கப்பட்டது. மும்பாயிலிருந்த ஏனைய இலங்கையின் தப்பிச் செல்வோர் சென்னைக்குத் தப்பிச் சென்றனர். அங்கு அவர்களுக்கு கரொலைனும் டோனியும் வசித்துவந்த தேனாம்பட்டி வீனஸ் கொலனியில் அமைந்திருந்த பாரிய இரண்டு மாடி வீட்டில் புகலிடம் கிடைத்தது. பொலீசார் எப்போதும் இவர்களைத் துரத்திச் சென்றமையால் பிள்ளைகளை திருப்பி இலங்கைக்குக் கொண்டு செல்லுதல் பொருத்தமாகுமென கரொலைனும் டோனியும் தீர்மானித்தனர்.

கரொலைன் வெளியேறியதன் பின்னர் மிகவும் பாதுகாப்பானதெனக் கருதிய ஓர் இடத்துக்கு டோனி வசிப்பிடத்தை மாற்றினார். அது நாம்பள்ளி புகையிரத நிலையத்துக்கு முன்னால் பிரசித்திபெற்ற அம்பி கெபேயின் பின்புறம் எளிமையானதொரு குடிலாக இருந்தது. நினையாப்புறமாக அது அவர்களுக்குப் பாதகமாக அமைந்தது. சுற்றுச் சூழலில் சைவ உணவை உட்கொள்ளும் பிராமணர்களே அதிகமாக வசித்து வந்தனர். ஆதலால் டோனியுடன் வசித்து வந்த ஏனைய இளம் சகோதரர்கள் தமது அசைவ உணவை பெற்றுக்கொள்ளும் பொருட்டு நகரத்தின் வேறொரு பிரதேசத்துக்கச் சென்றனர். யாரோ அவர்களை அடையாளம்கண்டு பொலீசாருக்கு அறிவித்தார்களென்பதோடு, பொலீசார் அவர்களைப் பின்தொடர்ந்து வந்து வசிப்பிடத்திலிருந்த அனைவரையும் கைது செய்தனர். புரட்சிக்கு வழிவகுக்கின்ற பத்திரங்களை வைத்திருந்ததன் குற்றச்சாட்டின் பேரில் டோனிக்கும் இன்னொரு இலங்கைச் சகோதரருக்கும் அலிபுரம் சிறைச்சாலையில் இரண்டு வருடகால கடும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

## அவரது அரசியல் வாழ்க்கையின் உயர் காலகட்டம்

அலிபுரத்திலிருந்து விடுதலை பெற்றதன் பின்னர், டோனி இலங்கைக்கு திரும்பி வந்தார். ஆயினும் அவராலும் கரொலைனாலும் தமது நாட்டில் அரசியல் வாழ்க்கையில் சிறிது காலம் மட்டுமே மீண்டும் ஈடுபடுவதற்கு முடியுமாயிருந்தது. இவர்கள் பகிங்ஹாம் மற்றும் கார்னடிக் மோலில் யுத்த காலத்தில் ஈடுபட்டிருந்த செயற்பாடுகளின் பெறுபேறுகள் கிடைத்திருப்பதாக சென்னையின் BLPI அறிவித்திருந்தது. புடவைத் தொழிற்சாலைத் தொழிலாளர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இந்தியாவின் மிகப் பழைமைவாய்ந்த மற்றும் மிகப் பெரிய தொழிற் சங்கமான சென்னைத் தொழிற் சங்கத்தின் தலைவர் தலைமைத்துவத்தை டோனியிடம் ஒப்படைப்பதற்கு விருப்பம் தெரிவித்திருந்தார். அதனை மறுக்க முடியாதிருந்தது. ஆதலால் டோனியும் கரொலைனும் பிள்ளைகளும் மீண்டும் சென்னைக்குச் சென்றனர்.

1946 ஜுன் 06 ஆம் திகதி டோனி சென்னைத் தொழிற் சங்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். அதற்கு பிந்திய தினமே புடவைத் தொழிற்சாலையில் ஏற்பட்ட ஒரு சம்பவத்தின் காரணமாக ஒரு வேலைநிறுத்தம் நடைபெற்றது. கரொலைனும் அவரது BLPI சகோதரர்களும் வேலைநிறுத்த ஒத்துழைப்புப் பணிகளில் முழுமையாக ஈடுபட்டனர். 48 நாட்களுக்குப் பின்னர் சங்கம் தமது பிரதானமான கோரிக்கைகளை வென்றது. 1947 ஆரம்ப காலத்தில் B&C தொழிற்சாலையின் நிலைமை மீண்டும் சூடுபிடித்தது. தொழிற் சங்கத் தலைவர்கள் வேலைநிறுத்த நிதியங்களைத் திரட்டுவதற்கு ஆரம்பித்து, அயலவர்களைக் கொண்டு குழு வலையமைப்பொன்றை ஒழுங்கு செய்து தொழிலாளர் பாதுகாப்பு வேலைத்திட்டமொன்றின் பொருட்டு ஆயிரம் தொண்டர் செயற்பாட்டாளர்களைச் சேர்த்துக்கொண்டனர். வேலைநிறுத்தம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் டோனியைக் கைது செய்வார்கள் எனக் கருதிய தொழிற் சங்கம் கரொலைனுக்கு தலைமைத்துவப் பொறுப்புகள் ஒப்படைக்கப்படுகின்ற விதத்தில் இரகசியமான வேலைநிறுத்தக்

குழுவொன்றைத் தயார் செய்தது. இக் குழுவின் மூளையாகவும் முதுகெலும்பாகவும் ட்ரொஸ்கிவாதிகள் விளங்கினர்.

மார்ச் 10 ஆம் திகதி விடிவதற்கு முன்னர் பொலீசார் டோனியைக் கைது செய்தனர். இரகசியக் குழு அன்று மாலை பொதுக் கூட்டமொன்றுக்கு அழைப்பு விடுத்தது. கண்ணால் கண்ட ஒரு சாட்சியாளரின் கூற்றுப் பிரகாரம், இக் கூட்டத்தில் “அவரது உணர்ச்சிகளின் உயர்ந்தபட்ச நிலைமையில் திருமதி கரொலைன் அன்தோனி பிள்ளை ஆற்றிய உரை தொழிலாளர்களுக்குத் தமது பொறுப்புகள் தொடர்பான புதியதொரு உணர்வை ஊட்டியதோடு, அவரது உரை அவர்களுக்கு ஒரு புதிய பாதையைக் காட்டியது.” டோனியும் ஏனைய தலைவர்களும் விடுதலை செய்யப்படும் வரை எவ்விதப் பேச்சுவார்த்தையும் நடைபெறாதென அவர் கூறினார். மறுதினம் 14,000 க்கும் அதிகமான தொழிலாளர்களில் ஒருவர் கூட B&C தொழிற்சாலைக்குச் செல்லவில்லை. டோனியை சிறை வைத்துள்ள சிறைச்சாலைக்கு தொழிலாளர்கள் ஊர்வலமாகச் செல்வார்கள் எனக் கருதிய அரசாங்கம் அவரை ஆந்திராவின் தூர இடமொன்றில் அமைந்துள்ள சிறைக்கூடமொன்றுக்கு மாற்றி தனியாக சிறையிலடைத்து வைத்தது.

மார்ச் 28 ஆம் திகதி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட 40,000 க்கும் அதிகமானோரும் அவர்களது குடும்பத்தினர்களும் தொழிற் சங்க பொதுக் கூட்டமொன்றில் ஒன்றுகூடினர். அதில் பிரதம பேச்சாளராக இருந்த கரொலைன் வேலை நிறுத்தத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் பொருட்டு சென்னையில் ஒரு நாள் பகிஷ்கரிப்பொன்றை மேற்கொள்ள வேண்டுமெனக் கூறினார். பகிஷ்கரிப்பில் 100,000 க்கும் அதிகமானோர் பங்கேற்றனர். அவர்கள் போராட்ட மன நிலையில் இருந்தனர். தொழிலாளர்கள் வீதித் தடைகளை ஏற்படுத்தினர். பெருமளவு அதிகாரத்தைக் காட்டும் வகையில் அரசாங்கம் இராணுவப் படைப் பிரிவினர்களை ஈடுபடுத்தியது.

ஒரு நாள் இரவு கரொலைனும் செலீனா பெரேராவும் பெரும்பூரில் வேலைநிறுத்தக் குழுவின் இரகசிய கூட்டமொன்றுக்குச் செல்வதற்காக வெளியிறங்கிய போது பஸ் தரிப்பு நிலையம் வரை தம்மைப் பின்தொடர்ந்து வரும் இருவர் தொடர்பில் அவர்களது கவனம் திரும்பியது. சந்தேகமின்றி அவர்கள் புலனாய்வுப் பிரிவின் பொலீஸ் உத்தியோகத்தர்களாயிருக்கலாம் எனக் கருதிய கரொலைன் திட்டம் ஒன்றை வகுத்தார். பஸ் வண்டி வந்ததும், இரண்டு மனிதர்கள் கெட்ட எண்ணத்தோடு தம்மைப் பின்தொடர்ந்து வருவதாக பஸ் சாரதிக்குக் கூறிய கரொலைன் பஸ் வண்டியின் முன்புறக் கதவுக்குப் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தார் என்பதோடு, செலீனா பின்புறக் கதவுக்குப் பக்கத்தில் நின்றார். பொலீஸ் உத்தியோகத்தர்கள் இருவரும் பஸ் வண்டிக்கு ஏறுவதற்கு முயற்சித்த போது அவர்கள் தமது முழுப் பலத்தையும் பயன்படுத்தி அந்த உத்தியோகத்தர்களைக் காலால் உதைத்தார்கள் என்பதோடு பஸ் வண்டி மிக வேகமாக ஓட்டிச் செல்லப்பட்டது.

மறுநாள் காலையில் மலபார் விசேட பொலீசார் கரொலைனின் வீட்டிற்கு வந்து அவரை வீட்டுக் காவலில் தடுத்து வைத்தனர். அதன் மூலம் கரொலைனின் செயற்பாடுகள் மாற்றமடையவில்லை. அவர் கடிதங்களை வரைந்து அவற்றைத் தமது மூத்த மகனின் காற்சட்டையின் உட்புறம் வைத்து பெரும்பூரின் தொழிற்சங்கத் தலைவர்களைச் சந்திப்பதற்கு அவரை அனுப்பினார். அரசாங்கம் அனைத்துக் கூட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் தடை செய்த போது கரொலைனும் அவரது சகோதரர்களும் வேறு ஆக்கபூர்வமான உபாய வழிமுறைகளைப் பயன்படுத்தினர். ஒரு சந்தர்ப்பத்தில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டவர்களில் 500 பேர் சிறிய குழுக்களாக மத்திய புகையிரத நிலையத்திற்கு இரகசியமாக நுழைந்தார்கள் என்பதோடு, பின்னர் ஒன்றுகூடி வெளியே ஆர்ப்பாட்டக் கோஷங்களை எழுப்பிக் கூச்சலிட்டுக்கொண்டு பொலீசாரை அதிசயிக்கச் செய்யும் வகையில் ஊர்வலமாக வெளியே சென்றனர்.

ஜுன் மாதம் 09 ஆம் திகதி அரசாங்கம் தொழிற் சங்கத்தைச் சட்ட விரோதமானதென அறிவித்து அதன் நிதியங்களைத் தடை செய்து தலையகத்தைப் பூட்டுப்போட்டு மூடிவிட்டு, அங்கத்தவர்கள் 49 பேரைக் கைது செய்தது. இரவு பூராவும் மலபார் விசேட பொலீசின் 10,000 பேர் கொண்டதொரு படை கைத்தொழில் மாவட்டத்தை அச்சுறுத்தும் வகையில் ஆயிரக்கணக்கான வேலைநிறுத்தக்காரர்களைக் கைது செய்தது. வேலைநிறுத்தத்தை முடிவுறுத்துவதைத் தவிர வேறு மாற்று வழியெதுவும் சென்னை தொழிலாளர் சங்கத்துக்கு இருக்கவில்லை. ஆயினும், ஏறத்தாழ 3000 தொழிலாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்து தொழிற்சாலைக்கு வருகை தராதிருந்தனர்.

வேலைநிறுத்தம் தோற்கடிக்கப்பட்ட போதிலும், கரொலைனும் டோனியும் சென்னையில் தொழில் புரியும் மக்களது பாராட்டுதலையும் ஒத்துழைப்பையும் வென்றனர். 1947 இல் டோனி, சென்னை துறைமுக நம்பிக்கைப் பொறுப்பு ஊழியர் சங்கத்தின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார் என்பதோடு, அடுத்த ஆண்டில் அவரும் சென்னை தொழிலாளர் சங்கத்தின் மேலும் ட்ரொஸ்கிவாத உத்தியோகத்தர்கள் இருவரும் சென்னை மாநகர சபைக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

## “மனிதனின் பின்னாலிருந்த பெண்மணி”

1948 இல் கரொலைன் அவரது மூன்றாவது மகனான நளீன் ரஞ்ஜனைப் பெற்றெடுத்தார் என்பதோடு, இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் அவரது நான்காவது மகன் சுரேஷ் குமார் பிறந்தார். பெரியதொரு குடும்பத்தின் தாய் என்ற வகையில் அவரால் அரசியலின் பொருட்டுப் பயன்படுத்தக்கூடிய காலம் குறைந்து வந்தது. இதற்கிடையே டோனியை விரிவடைந்து வந்த தொழிற் சங்கப் பொறுப்புக்கள் மென்மேலும் சூழ்ந்துகொண்டது. அவர் பலம்பொருந்திய இந்திய துறைமுகங்கள் மற்றும் கப்பற் தடாக ஊழியர் சம்மேளனத்தின் செயலாளர் நாயகமாகவும் உப தலைவராகவும் அனைத்து இந்திய போக்குவரத்துச் சங்கத்தின் தலைவராகவும் நியமிக்கப்பட்டார். 1952 இல் அவர் ஹிந்த் மஸ்தூர் சபா எனும் அகில இந்திய சோசலிச தொழிற் சங்க சம்மேளனத்தின் உப தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அவரது அலுவல்களின் காரணமாக இறுதியில் அவளுக்கு “பின் ஆசனமொன்றைப்” பெற வேண்டி வந்த போதிலும் கரொலைன் தொடர்ந்தும் அவரது அரசியல் உதவியாளராக இருந்தார். அவள் அவருக்கு அறிவுரைகளை வழங்கினார். கஷ்டமான ஆண்டுகளில் அவருக்கு நிதியுதவியை வழங்கினார். அவரது தொழிற் சங்க அலுவல்களுக்கு ஒத்துழைப்பு வழங்கினார். சில சந்தர்ப்பங்களில் மென்மேலும் போராட்ட குணமுடையவராக மாறுவதற்கு அவரைத் தூண்டினார். அவளினுள் இருந்த “பொரளுகொடை தீப் பொறி” ஒருபோதும் அணையவில்லை.

கரொலைன் அன்தோனி பிள்ளை அரசியலில் கடந்ததொரு யுகத்தின் வாழ்ந்து வரும் இடையிணைப்பாளராக உள்ளார். அவள் அவளது நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடுவதற்கும் தொழிலாளர் வகுப்பினரை எழுச்சிபெறச் செய்யும் பொருட்டும் சுகபோகமான எதிர் காலத்தை நிராகரித்தார். அவள் அவளது வாழ்க்கையை புரட்சிகரமான முற்போக்குக் குழுவுக்காகவே அர்ப்பணித்தார். ஆபத்து மற்றும் கஷ்டங்களுக்கு மத்தியில் அவள் ஒரு போதும் பின்வாங்கவில்லை. அவள் ஏனையோருக்கு உற்சாகமளிக்கின்ற ஒரு சக்தியைப் போன்றே அவர்களுக்கு வழிகாட்டி அறிவுரை வழங்குபராகவும் விளங்கினார். அவள் பொய் மற்றும் பச்சோந்தி வாழ்க்கையைக் கடுமையாக வெறுத்தார்.

பொரளுகொடை பெண் சிங்கமாக மாறிய, யானைகளின் வயிற்றுக்குக் கீழால் கடந்து சென்ற துணிவுமிக்க சிறுமி – கரொலைன் அன்தோனி பிள்ளையை நாம் கௌரவிப்போம்.

**சார்ள்ஸ் வெஸ்லி ஏர்வின்**

சாள்ல்ஸ் வெஸ்லி ஏர்வின், Tomorrow is Ours, The Trotskyist Movement in India and Ceylon, 1935 – 48 எனும் சமூக விஞ்ஞானிகளது சங்கத்தால் வெளியிடப்பட்ட நூலின் நூலாசிரியராவார். E mail: weservin@bellsouth.net

Printed by The Women and Media Collective and Social Scientists' Association, September 2008.